**<u>O.S.No. 174/2012</u>**

**<u>DW1 : சண்முகம்</u>** தேதி 05.11.2025

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் தந்தை பெயர் நாச்சிமுத்து கவுண்டர். என் அப்பா 1997 ல் எனக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் சொத்தை நான் என் மகளுக்கு எழுதி வைத்தேன். தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த தேதியில் இருந்து என் மகள் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் தான் கையெழுத்திட்டுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்னுடைது தான். அது **பிவாசாஆ** 21. எங்கள் குடும்பத்திற்கு பூர்வீக சொத்து எதுவும் இல்லை. என் மகனுக்கு தானசெட்டில்மெண்ட் சொத்தின் படி அவர் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார்.